சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 06.10.2025
வா.சா.1 – கனகவள்ளி என்ற கனகமணி க/பெ.ராஜ்திலக்
O.S. No.17/2021
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் வேலைக்கு செல்லவில்லை, வீட்டுக்குடித்தனம் தான் நடத்தி வருகிறேன். என் கணவர் இந்து சமய அறநிலையத்துறையில் ஆய்வாளராக உள்ளார். என் தந்தை பெயர் செந்தூர் பாண்டி. ராமகிருஷ்ணன் என்பவர் அப்பாவழியில் எனக்கு மாமா முறை வேண்டும். ராமகிருஷ்ணன் தற்போது கடன் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வருகிறார். பூர்ணவள்ளி என்னுடைய மதினி ஆவார். ராஜ்திலக் என்பவர் எனது கணவர் ஆவார். பிரதிவாதியை நான் பார்த்துள்ளேன். அவருடைய பெயர் உஷா. பிரதிவாதி உஷாவிற்கு நான் 5 லட்சம் ரூபாய் 22.06.2017ல் ஒத்தக்கடை பதிவு அலுவலகத்தில் வைத்து ரொக்கமாக கடனாக கொடுத்தேன். அதற்கு ஈடாக பிரதிவாதி எனக்கு அடமானம் எழுதி கொடுத்துள்ளார். பிரதிவாதி அடமானம் கொடுத்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நினைவில்லை. என்னுடைய மதினி பூர்ணவள்ளி, உஷாவின் கணவரான சௌடி என்பவருக்கு 5 லட்சம் ரூபாய் கடன் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். பூர்ணவள்ளி தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.16/2021 இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். உஷாவின் கணவர் சௌடி எனது மாமா ராமகிருஷ்ணனிடம் அணுகி கடன் கேட்டுள்ளார். ராமகிருஷ்ணன் என்னிடம் அணுகி கடன் கொடுக்கும்படி சிபாரிசு செய்தார். மேறபடி தொகையை சௌடி, உஷா தம்பதியரின் மகளுக்கு கல்யாண ஏற்பாடு ஆகியதால் கடன் வேண்டுமென்று கேட்கப்பட்டது. நான் கொடுத்த 5 லட்சம் ரூபாய் மாதம் 1.50 வட்டி ஆகும்.

தவறும்பட்சத்தில் 2 வட்டி ஆகும். நான் வழக்கிற்காக தவறாக வட்டி விகிதத்தை குறைத்து சொல்கிறேன் என்றும் நாங்கள் 5 வட்டிக்கு தான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. நான் உஷாவிற்கு கடன் கொடுத்த முன்னரே எனது மதினி பூர்ணவள்ளி, சௌடிக்கு ஏற்கனவே கடன் கொடுத்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்திற்கு வந்த பின்னர் தான் பூர்ணவள்ளி கடன் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். ஏற்கனவே பூர்ணவள்ளியிடம் பெற்று கொண்ட 5 லட்சத்திற்குண்டான வட்டி தொகையை கழித்த பின்னரே மீததொகையை உஷாவிடம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. உஷாவிடம் மீதப்பணத்தில் உள்ள தொகையில் 25000ரூபாய் வட்டியை கழித்த பின்னர் தான் கமிஷன் தொகை 25000ரூபாய் கழித்த பின்னர் ஈடுகடன் பதிவு செலவு 20000ரூபாய் கழித்ததுபோக மீததொகை 4,05,000ரூபாய் மட்டுமே உஷாவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி அடமான பத்திரத்தில் சாட்சியாக யார் கையெழுத்திட்டார்கள் என்றால் கார்மேகம் மற்றும் அருண்குமார். கார்மேகம் எனதுமாமா ராமகிருஷ்ணனின் நண்பர். அருண்குமார் என் உடன்பிறந்த சகோதரர் ஆவார். கார்மேகம் என்பவர் ராமகிருஷ்ணனுக்கு கடன் வாங்கி கொடுக்கும் தரகர் வேலை செய்து வருகிறார் என்றால் அது தவறாகும். 5லட்சம் ரூபாயை நான் நகையை அடகு வைத்து கடனாக கொடுத்தேன். நகை அடகு வைத்த ரசீது எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி உஷாவிடம் இருந்து எழுதப்படாத வெற்றுபத்திரம், காசோலை கூடுதல் பிணையத்திற்காக வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. வெண்ணிலையாக பத்திரத்தில் நான் எழுதி வாங்கி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வேறு நபர் பெயரில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மார்ச் 2020 வரை பிரதிவாதி மாதம் 1

லட்சம் ரூபாய் ரொக்கமாக 5 வட்டி வீதம் தவறாமல் கொடுத்து வந்துள்ளர் என்றால் சரியல்ல. 2020 மார்ச் முதல் கொரானா வைரஸ் தொற்று ஏற்பட்டு முழு ஊரடங்கு உத்தரவால் ஓட்டல் தொழில் செய்யமுடியாமல் அவரால் வட்டி கொடுக்கமுடியாமல் போனது என்றால் சரியல்ல. சௌடி மீது, எனது மாமா ராமகிருஷ்ணன் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றம், மதுரையில் அ.வ.எண்.194/2020 தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கடந்த மே 9, 2019ம் ஆண்டு கே.புதூரில் உள்ள பிரதிவாதிகள் நடத்திவந்த ஓட்டலுக்கு சென்று பிரதிவாதியையும் அவரது கணவரையும் மிரட்டி வெண்ணிலைபத்திரமாகவும், பூர்த்தி செய்யப்படாத காசோலைகளையும் கூடுதல் பிணையத்திற்காக வாங்கிவைத்துள்ளோம் என்றால் சரியல்ல. 04.06.2020 அன்று ராமகிருஷ்ணன்,நானும் சேர்ந்து பிரதிவாதி மற்றும் அவரது கணவர் சௌடியையும் அசலும் வட்டியும் 60 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்றும் மிரட்டினோம் என்றம் கொடுக்கவில்லை என்றால் வெண்ணிலைபத்திரத்தை வைத்து போலி ஆவணங்கள் உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்வதாக கூறினோம் என்றால் சரியல்ல. நானும் எனது மாமா ராமகிருஷ்ணனும் பணம் தர மறுத்ததால் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் கொலைமிரட்டல் விடுத்தோம் என்றால் சரியல்ல. 04.06.2020 அன்று ராமகிருஷ்ணன், எனக்கும், பூர்ணவள்ளிக்கும் பிரதிவாதியின் கணவர் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி அறிவிப்பு கிடைக்ப்பட்ட பின்பு பிரதிவாதிக்கும் அவரது கணவர்சௌடிக்கும் ஓட்டலுக்கு சென்று கொலைமிரட்டல் விடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி கொலைமிரட்டல் விடுத்தது தொடர்பாக பிரதிவாதியும், அவரது கணவரும் 06.06.2020 அன்று காவல்துறை கண்காணிப்பாளர், மதுரை அவர்களுக்கு பதிவு தபால்மூலமாக புகார் ஒன்றை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி

விபரம் தெரிந்து கொண்டு, பிரதிவாதியையும்,அவரது கணவரையும் மிரட்டியிருக்கிறோம் என்றால் சரியல்ல. 10.06.2020 அன்று நான் மிரட்டியதால் பிரதிவாதி மனவேதனை அடைந்து தற்கொலை செய்ய முயற்சி செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, புகார் மனு ஏற்பு ரசிது கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இதுதொடர்பாக விசாரணைக்கு எங்களை அழைக்கவும் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் நான் அப்பந்திருப்பதி காவல்நிலையத்தில் நாங்கள் முன்னிலையானோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் சௌடி, ராமகிருஷ்ணன், பூர்ணவள்ளி, என்மீதும் கந்துவட்டிகொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழும், கொலைமிரட்டல் விடுத்ததாக தொடர்பாக பிரிவு 506(2) இதசவின் கீழ் நீதித்துறை நடுவர் நிதிமன்றம் 5, மதுரை முன்பாக கொடுக்கப்பட்டு மேற்படி கோப்பில் எடுக்கப்பட்டு, CC No.992/2022 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். எனக்கு வட்டி கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுதவிர வேறு என் பெயரில் எந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை. நாங்கள் கேட்கும் வட்டி கிடைக்காது என்றும் நாங்கள் மிகைப்படுத்தி வட்டியை கோரியிருக்கிறோம் என்றும் நிதிமன்றம் கொடுக்கும் 6 % வட்டி மட்டுமே எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவரது கணவரும் சமரசம் செய்ய என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. கடன் வாங்கியது 5 லட்சம் என்றும் தற்போது 8 லட்சம் வரை பிரதிவாதி கொடுக்க தயாராக இருக்கிறார் என்றால் எங்களுக்கு தேவையில்லை. நான் அதிக வட்டிக்குஆசைப்பட்டு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட

எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.10.06 20:43:11 +0530

Sub Judge

Melur